# UNIVERSITY OF PERADENIYA

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) – AUGUST 2016

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - අගෝස්තු 2016

ISLAMIC CULTURE I/ ඉස්ලාම් සංස්කෘතික I - ( ICG I)

**(The Political History of Islam)**

இவ்வினாத்தாளில் மொத்தம் **08** வினாக்கள் உள்ளன. எவையேனும் ***ஐந்து*** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக. சகல வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும். எழுத்துத் தெளிவில்லாவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

01. கலீபா வலீத் இப்னு அப்துல் மலிக் கால இராஜ்ய வியாபகம் பற்றிக் குறிப்பிட்டு, சிந்துப் பிரதேச வெற்றி ஏற்படுத்திய விளைவுகளைப் பரிசீலிக்க.

02. கலீபா அப்துல் மலிக் பின் மர்வான் பதவியேற்ற பின்னணியைக் குறிப்பிட்டு, தனது கிலாபத்தை ஸ்தீரப்படுத்துவதிலும், நாட்டை அபிவிருத்தியடையச் செய்வதிலும் அவர் ஆற்றிய பங்களிப்பை மதிப்பீடு செய்க.

03. முஸ்லிம் ஸ்பெயினின் ஆட்சியில் கல்வி, பொருளாதார, சமூகத் துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி பற்றி விபரிக்க.

04. உமைய - அப்பாஸிய கிலாபத்தின் தோற்றப் பின்னணியைக் குறிப்பிட்டு அவ்விரு ஆட்சியினதும் நிர்வாக முறைகளில் தென்படும் ஒற்றுமை, வேற்றுமைகளை எடுத்துக் காட்டுக.

05. சிறுகுறிப்பு எழுதுக.

    1. கர்பலா நிகழ்வு.
    2. கலீபா முஆவியா.
    3. சிற்றரசுகளின் தோற்றத்துக்கான காரணங்கள்.
    4. ஸலாஹுத்தீன் ஐயூபி கால பலஸ்தீன் வெற்றி

06. அப்பாஸிய கிலாபத்தின் வீழ்ச்சிக்கு வழிகோலிய காரணிகளைக் குறிப்பிட்டு, தாத்தாரியரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தியதில் சுல்தான் ஸைபுத்தீன் குதுஸ் அவர்களின் பங்களிப்பை விபரிக்க.

07. சல்ஜுக்கிய சிற்றரசின் தோற்றம் பற்றியும், அது அப்பாஸிய கிலாபத்தில் பெற்றிருந்த செல்வாக்கு பற்றியும் ஆராய்க.

08. கலீபா மஃமூனின் ஆட்சி பற்றியும், அவர் அறிவியலுக்காற்றிய பங்களிப்பு பற்றியும் விளக்குக.

# UNIVERSITY OF PERADENIYA
## පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
## දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

**GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2016**

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - අගෝස්තු 2016

**ISLAMIC CULTURE II/ ඉස්ලාම් සංස්කෘතික II - ( ICG II)**

**(Fundamentals of Faiths and Sectional Development)**

இவ்வினாத்தாளில் மொத்தம் **08** வினாக்கள் உள்ளன. எவையேனும் ***ஐந்து*** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக. சகல வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும். எழுத்து தெளிவில்லாவிடின் புள்ளிகள் குறைக்கப்படும்.

நேரம்: மூன்று (03) மணித்தியாலம்

---

01. முஸ்லிம்களிடையே அகீதா சார்ந்த விடயங்களில் ஏற்பட்ட வேறுபாடுகள் பற்றிக் குறிப்பிட்டு, அவர்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான உமது ஆலோசனைகளை முன்வைக்குக.

02. தஸவ்வுப் - தரீக்கா பற்றிக் குறிப்பிட்டு, அவற்றின் சமகால நிலையை விமர்சன ரீதியாக ஆராய்க.

03. "பித்ஆ" என்பதன் மூலம் யாது கருதுகின்றீர்? அதனை வரைவிலக்கணப்படுத்துவதில் இமாம்களிடையே நிலவும் கருத்துக்களையும், பித்ஆ முஸ்லிம் உம்மாவில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் பற்றியும் ஆராய்க.

04. பின்வருவனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து "மறுமை நம்பிக்கை" பற்றி விளக்கம் தருக.
    1. மறுமையின் அவசியம்.
    2. மறுமை ஏற்படுவதற்கான சாத்தியப்பாடு.
    3. மரணத்தின் பின்னரான வாழ்வு.
    4. மறுமை நம்பிக்கை மனிதனில் ஏற்படுத்தும் தாக்கம்.

05. இபாதா பற்றிய இஸ்லாமியக் கண்ணோக்கைக் குறிப்பிட்டு, நோன்பின் தனி மனித, சமூக, ஆன்மீக, லௌகீகப் பயன்பாடுகள் பற்றி விரிவாக விளக்குக.

06. சிறு குறிப்பு எழுதுக.
    1. இமாமிய்யத் - ஸைதிய்யா வேறுபாடு.
    2. தௌஹீத் அல் உலூஹிய்யத்.
    3. முர்ஜிஆக்கள்.
    4. ரஸாஇலு இஹ்வானுஸ் ஸபா.

07. "ஷிர்க்" ஒரு பெரும் பாவம் என்பதை விளக்கி, அது மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம் யாதென்றாராய்க.

08. ரிஸாலத்தின் அவசியம் மற்றும் அதன் சாத்தியப்பாட்டைக் குறிப்பிட்டு, முஹம்மத் (ஸல்) அவர்களே இறுதி நபியாவார் என்பதை ஆதாரபூர்வமாக நிறுவுக.

*******

# UNIVERSITY OF PERADENIYA

පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

## CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

## GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2016

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - අගෝස්තු 2016

## ISLAMIC CULTURE III/ ඉස්ලාම් සංස්කෘතික III - ( ICG III)

**(Muslim Sciences and Fine Arts)**

இவ்வினாத்தாளில் மொத்தம் **08** வினாக்கள் உள்ளன. எவையேனும் ***ஐந்து*** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக. சகல வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும். எழுத்து தெளிவில்லாவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

1. நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் வளர்ச்சியில் அல்குர்ஆனின் வழிகாட்டல்களை எடுத்துக் காட்டுக.

2. "மத்திய காலப் பகுதியில் முஸ்லிம்களை அதிகூடியளவு ஈர்த்த துறையாக எழுத்தணி விளங்கியது" ஆராய்க.

3. வானியல் துறை வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.

4. இசை பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாட்டை விளக்கி, அப்பாஸியர் காலப் பகுதியில் அதன் வளர்ச்சியை மதிப்பிடுக.

5. கணிதவியல் துறையில் முஸ்லிம்களை ஈடுபடத் தூண்டிய காரணிகளைக் குறிப்பிட்டு, அத்துறை வளர்ச்சிக்குப் பங்களித்தவர்கள் பற்றி விளக்குக.

6. அழகியலின் தேவையையும் முக்கியத்துவத்தையும் விளக்கி, அழகியல் பற்றிய இஸ்லாத்தின் நோக்கைப் பரிசீலிக்க.

7. இரசாயனவியல் பற்றிய இஸ்லாமியக் கருத்துக்களையும், அது அப்பாஸியர் ஆட்சிக் காலத்தில் பெற்றிருந்த முக்கியத்துவத்தையும் ஆராய்க.

8. பின்வரும் அறிஞர்களின் அறிவியல் துறைப் பங்களிப்பைச் சுருக்கமாகத் தருக.

    1. அல் குவாரிஸ்மி
    2. அல் பஸாரி
    3. இப்னு ஹய்யான்
    4. இப்னுல் பைதார்

************